# பெண்ணிய நோக்கில் அறிவியல் புனைகதைகள்

**முனைவர் இரா. முரளி கிருட்டினன்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

ஒடுக்கப்பட்டவர்களை அரசியல் மையப்படுத்துதல் என்பது, அவர்களோடு உரையாடுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் தமக்கும், ஒட்டுமொத்தமாக சமூகத்திற்கும் விடுதலை பெற்றுத்தர தேவைப்படும் அறிவினை வழங்குவதும் ஆகும். இவ்வகையில் ஒடுக்கப்பட்ட இனமான பெண்களுக்கு அவர்களது உரிமைகள் குறித்து அறிவூட்டுவதும், பாலினச் சமத்துவத்திற்காகப் போராட அறிவுறுத்துவதும் பெண்ணியம் என்றழைக்கப்படுகிறது. இருப்பினும், தாம் ஒடுக்கப்படுகிறோம் என்று உணர்ந்து அதற்கெதிராகப் போராடும் சாதி, இனம், வர்க்கம் போன்ற மற்ற விடுதலை இயக்கங்கள் போல் அல்லாமல், பெண் விடுதலை இயக்கங்கள் நூதனமான ஒரு சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பெண் அடிமைத்தனம் என்பது இயற்கையானது என்று விதைக்கப்பட்டுவிட்ட ஆழமான நம்பிக்கைகளை முதலில் தகர்த்தெரிய வேண்டியுள்ளது.

எதிர்பாலினம் மற்றும் குடும்பத்தினரோடு கொள்ளும் உறவென்பது மனித வாழ்வின் ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது. இருப்பினும், மாபெரும் சமூக அமைப்பில் அச்சிறிய செயல்பாடானது, ஏற்றத்தாழ்வு நிறைந்ததாகவே உள்ளது. இதனால் பெண்கள் குடும்பம், சமூகம் ஆகிய இரு தளங்களில் “இரட்டை ஒடுக்குமுறைக்கு” உள்ளாகிறார்கள். இத்தகைய இரட்டை ஒடுக்குமுறைகள் அறிவியல் புனைகதைகளில் எங்ஙனம் சித்திரிக்கப் பெற்றுள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### பெண்கள் குறித்த ஆணாதிக்கச் சிந்தனைகள்

ஆண்டாண்டு காலமாகப் பெண்ணைத் தாழ்த்தியே வாழ்ந்த ஆணினம் அவ்வளவு சுலபமாகத் தன் பிடியிலிருந்து பெண்ணை விட்டுவிட இயலாது என்ற பிற்போக்குச்சிந்தனையைக் கொண்டுள்ளது. இதனால்தான் கல்வியில், பணியில், உயர்பதவியில், பொருளாதாரத்தில், அதிகாரத்தில், பெண் ஆணுக்கு இணையாக நின்றாலும் அவளை ஒரு போகப்பொருளாகப் பார்க்கும் நிலை மாறவில்லை. இதனை,

> நீ ஒரு பெண். ஒரு போதைப்பொருள். நீ ஒரு அழகான உடல். உள்வட்டத்திற்கு ஏற்பட்ட மானிட மெத்தை… உன் போன்று முன்னூறு பெண்கள் இருக்கிறார்கள். நீ தேவையில்லை! உன்னைக் கொன்று விடலாம். (சுஜாதா, 2009, ப. 117)

என்னும் ஜீவாவின் கூற்று வெளிப்படுத்தியுள்ளது.

ஆணாதிக்கச் சமூகத்தின் இத்தகைய போக்கு அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் மாறாததற்கு உரிய காரணத்தை ராஜ்கௌதமன்,

> பெண்ணின் பாலியல் ஒழுக்கம் ஆணைச் சார்ந்து அவனால் இயக்கப்படுவதாக இருந்தது. ஆனால் ஆணின் பாலியல் ஒழுக்கம் அவனைப் பொறுத்தவரை ஒரு சொகுசு! பரத்தை என்னும் விலைமகள்∴ பொதுமகளிடம் போகாத கணவனுக்குக் கூடுதலாகப் புகழ். அதற்காகப் பரத்தையிடம் போகும் ஆணை ஒரு பரத்தன் என்று யாரும் பழிக்கவில்லை. ஆணின் பாலியல் ஒழுக்கம் அன்று பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்ட ஒழுக்கவியலின் ஒரு பிற்சேர்க்கை (Supplement) போலக் கருதப்பட்டது. (ராஜ்கௌதமன், 2006, ப. 23)

என்று குறிப்பிடுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**இல்லறத்தின் பெயரால் ஒடுக்குதல்கள்**

கணவனை மட்டும் நம்பி வாழும் பேபி சரோஜா என்னும் பெண்ணின் கணவன் பொறுப்பில்லாமல் வீட்டிலுள்ள பொருள்கள் யாவையும் விற்று மது, மாதுவிற்காகச் செலவழிக்கிறான். திடீரென ஒருநாள் அவன் தலைமறைவான பிறகு பேபி சரோஜா, வாழ வழியில்லாமல் தன் மகனுடன் சென்னையில் உள்ள தன் அண்ணன் வீட்டிற்குச் சென்று சேர்கிறாள். அங்கு அண்ணியின் ஒடுக்குமுறைக்கு இருவரும் ஆளாகிறார்கள். இதனை,

> அம்மா வந்ததும் மாமி செய்த முதற்காரியம் வீட்டு வேலைக்காரியை வேலையைவிட்டு நிறுத்தியதுதான். ஏனெனில், ஒரு வீட்டுக்கு இரண்டு வேலைக்காரிகள் தேவை இல்லை. அல்லவா? துணி துவைத்தல், பாத்திரம் தேய்த்தல், சமைத்தல் போன்றவை அம்மாவின் வேலையாயிற்று. கடைக்குப்போதல், காய்கறி வாங்குதல், நரேஷைக் கவனித்துக் கொள்ளுதல் போன்றவை என் வேலையானது. ஊரில் அப்பா தண்டித்தது போதாதென்று சென்னைக்கு வந்து நாங்கள் இரண்டாம் முறையாகவும் தண்டிக்கப்பட்டோம். (எம்.ஜி.சுரேஷ், 2003, ப. 56)

எனப் பேபி சரோஜாவின் மகன் நரேந்திரன் கூறுவதிலிருந்து இல்லறத்தில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் எதிர்காலத்திலும் தொடரும் என்பதை எம். ஜி. சுரேஷின் ‘37’ புதினம் தெளிவுப்படுத்துகிறது.

**பாலியல் வன்முறைகள்**

மனிதரிடையே இருக்கும் இயல்பான உணர்வுகளில் ஒன்றுதான் பாலுணர்வு. சமூக அக்கறை கொண்ட சான்றோர்கள் ஆரோக்கியமாக மனித சமூகம் மலர, பாலுறவிற்குச் சில கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் வகுத்துள்ளனர். ஒருவன் அக்கட்டுப்பாடு-களையும் வரையறைகளையும் மீறும் போது அதை சமூகம் குற்றமாகக் கருதப் படுகிறது.

> மனிதனின் உளவாழ்வுக்கு பாலுணர்ச்சியே ஆதாரமாகும், அவனின் தனித்த குணங்கள், குடும்ப உறவுகள், சமுதாய உறவுகள் ஆகிய அனைத்தும் பாலுணர்ச்சி அடிப்படையில் தான் நிகழ்கின்றன. மேலும் உள வாழ்வின் உந்துசக்தியாகப் பாலுணர்ச்சி விளங்குகின்றது. அதே போல் உள்ளம் இயங்குவதற்கான இயங்கு சக்தியாகப் பாலுணர்ச்சி விளங்கிறது. (அந்தோனி ஸ்டோர், 2005, ப. 153)

என்று ஃபிராய்டு கூறுகிறார்.

> மனித வாழ்வுக்கு உண்ணும் உணவைப் போல பருகும் நீரைப்போல் இன்றியமையாத வேண்டப்படுகின்ற ஓர் இயற்கையான தேவையே பாலுணர்வு. (அந்தோனி ஸ்டோர், 2005, ப. 99)

என்கிறார் பெர்ட்ராண்டு ரஸ்ஸல்.

ஆர்னிகா நாசரின் ‘தோழன்’ என்ற அறிவியல் கதையில் பெண்கள் போகப் பொருளாகத்தான் இருந்திருக்கிறார்கள் என்பதை,

> நமது ஜாதி தோழிகளுடன் உடலுறவு கொண்டோம். சுகம் சுகம் பரமசுகம்! அதற்குத் தண்டனை உண்டு என்பது அறிந்தே உயர்ஜாதிப் பெண்களை உறவுக்கு அழைத்தோம். முதலில் பயந்தார்கள். பின் த்ரிலுக்காகச் சம்மதித்தார்கள். உறவுக்குப் பின் அசந்து போனார்கள். நாம் சிறப்பான காதல் மன்னர்கள் என்பதை மனதார ஒத்துக்கொண்டார்கள். நம்மிடம் வருவதற்கு அவர்களுக்குள் பலத்த போட்டி. (ஆர்னிகா நாசர், 2001, ப. 25)

என்பதன் மூலம் அறிய முடிகிறது.

எம். ஜி. சுரேஷின் ‘37’ புதினத்தில், சுப்புலட்சுமி தனியார் இரும்புக் கடையில் வேலை செய்கிறாள். அக்கடையில் வேலை செய்யும் ஓர் இளைஞன் பாலியல் தொல்லைகள் கொடுத்துக் கொண்டுஇருக்கிறான். அதைத் தாங்கமுடியாத அப்பெண் கடை முதலாளி

டாண்டனிடம் புகார் செய்கிறாள். ஆனால் கடையின் முதலாளியும் இவளிடம் பாலியல் சீண்டல்களைத் தொடர்கிறான். இதனை,

> வேறு வழியில்லாமல் (அப்படித்தான் சுப்பு சொன்னாள்) டாண்டனிடம் இந்த அத்துமீறல்கள் பற்றிப் புகார் செய்திருக்கிறாள். தன்னுடைய கடையில் குத்துக்கல் மாதிரிதான் ஒருத்தன் இருக்கையில் தன்னைத் தவிர வேறு ஒருத்தன் சுப்புலட்சுமியை உரசுவதில் அவனுக்கு உடன்பாடு இல்லை. இதனால் உடனடியாக அவனை வேலையை விட்டு நீக்கினார். (எம். ஜி. சுரேஷ், 2003, ப. 56)

என்று நரேந்திரன் கூறுவதன் மூலம் ஆண்களின் பாலியல் வக்கிர மனப்பான்மைக்குப் பெண்கள் ஆளாகும் நிலையை அறிய முடிகிறது.

பெண்கள் வெறும் பிள்ளை பெறும் எந்திரமாகவே பார்க்கப்படுகிறார்கள் என்பதை,

> பெரியவரின் அறை வாசலில் அந்தப் பெண் சிரித்தாள். வெளிறிப் போயிருந்த உதடுகள், கல்யாணத்துக்கு இருக்கிறாள்... கட்டிடத்திலேயே அவளைச் சமாளிப்பதற்கு ஆள் இல்லை. பயப்படுகிறார்கள். எனினும்... எனினும் அவள் ஒரு பெண... ஒரு பிரஜாவிருத்தி இயந்திரம். மிகத் தேவையான இயந்திரம். (சுஜாதா, 2008, ப. 125)

என்று சுஜாதா ‘சூரியன்’ என்ற கதையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் பெண்கள் தங்கள் அடையாளங்களை மறைத்து, காட்சிப்பொருளாகவும் வாழுகின்ற சூழ்நிலை ஏற்படும் என்று அறிவியல் புனைகதைகள் சித்திரிக்கின்றன. சுஜாதாவின் ‘வாசனை’ என்ற சிறுகதையில், நவா உலகத்தில் பெண்களே கிடையாது. இருக்கும் பெண்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டவர்கள், நிஜப்பெண்கள் மொத்தம் ஒன்பது பேர் தான். அவர்களும் அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்டுக் காட்சிப்பொருளாய் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் நூற்றிற்கும் மேற்பட்ட பெண்கள் தங்கள் அடையாளங்களை மாற்றி வாழுகின்றனர். காரணம்,

> ஒன்பது பெண்கள் தான் என்று அரசு சொல்வது தப்பு. இந்த நகரிலேயே நூற்றுக்கணக்கான பெண்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பதுதான் கஷ்டம். மிகத் திறமையாகத் தங்களுக்குச் செயற்கை உறுப்புகள் பொருத்திக்கொண்டு ஆண்களைப் போலவே வாழ்கிறார்கள். காரணம், அவர்கள் பெண்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால் ஆண் பெரும்பான்மை சமுதாயத்தில் அவர்களைப் பங்கு போட்டு ஒரு மாற்றில் உண்டு இல்லை என்று பண்ணி உயிர் நீக்கிவிடுவார்கள். அதனால் அவர்கள் அடையாளங்களை மிகத் திறமையாக மறைத்து வாழ்கிறார்கள். (சுஜாதா, 2008, ப. 156)

என்று பெண்கள் தங்கள் அடையாளத்தை மறைத்து வாழுகின்ற நிலை ஏற்படும் என்று இக்கதை சுட்டுகிறது.

**பெண்களுக்கான எதிர்கால அச்சுறுத்தல்கள்**

பெண்ணுரிமை, பெண்விடுதலை, பெண்கள் போராட்டம் எனப் பேசப்படும் இந்நாளின் மாற்றம், இவற்றின் காரணமாக எதிர்வரும் காலங்களில் வெற்றியடையும் என்பதே அறிவியல் புனைகதைப் படைப்பாளரின் கருத்தாக அமைகிறது. கல்வி,வேலை வாய்ப்பு, உயர்பதவி என அனைத்திலும் ஆணுக்கு நிகராகப் பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர். பெண்ணின் விருப்பின்றி ஓர் ஆண்மகன் அவளை நெருங்க முடியாது. “பெண்கள் அனுமதியின்றி தொட்டால் இந்த நாட்டில் என்ன தண்டனை தெரியுமா? பெண்கள் வெறும் போகப்பொருட்களோ நுகர்பொருட்களோ இல்லை என்று ஜீவாவின் கையேடு குறிப்பிடுகின்றதே! என்ன தைரியத்தில் என்னைத் தொடுகிறீர்கள்” என்று பெண்கள் துணிவுடன் எதிர்க்கும் நிலையை ‘என் இனிய இயந்திரா’ புதினம் குறிப்பிடுகிறது.

‘மானிட்டர் திரையில் அதிகாரியின் முகம் தெரிய, என்ன வேண்டும் பெண்ணே,’ என்று சிரித்தார்.

‘என் பெயர் நித்யா, என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்ல யாராவது ஒரு பெண்ணை அனுப்ப வேண்டும். என் விருப்பம் இல்லாமல் ஒருவன் என்னைத் தாயாக்க முயற்சி செய்கிறான்.’

‘அப்படியா? மிகப்பெரிய குற்றம்! உடனே அனுப்புகிறோம். புதினைந்து செகண்டுகளில், எங்கே இருக்கிறாய்…?’ (சுஜாதா (2009), ப.28)

எனும் பகுதியும் இதனை வலியுறுத்தும்.

இன்று பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாவது போல் எதிர்காலத்திலும் பெண்கள் பாலியல் துன்புறுத்துதலுக்கு ஆளாவார்கள் என்று அறிவியல் புனைகதைகள் எச்சரிக்கின்றன. ‘என் இனிய இயந்திராவில்’, சிபியின் மனைவி நிலாவுடன் ரவி தன் பாலியல் தேவையை நிறைவேற்றிக் கொள்கிறான்.

ரவி! தயவு செய்து என்னை விட்டுவிடு. புண்ணியம் உண்டு. நான் மிகுந்த குழப்பத்தில் இருக்கிறேன். இதெல்லாம் வேண்டாம்… வேண்டாம்…

பேசாதே கவனி என்றான் ரவி.

ரவியின் அத்தனை பளுவும் அவள் மீது மிதிக்க மூச்சுத் திணறியது.

விருப்பமா, இல்லையா? விருப்பம் விருப்பம்… வேண்டும்.. வேண்டும்..!

(சுஜாதா (2009), ப.64)

என்று குறிப்பிடப்படுகிறது.

**தொகுப்புரை**

பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை பெண் என்பவள் ஆண்களின் போகப்பொருளாகவும், ஆண்களால் பாலியல் வன்கொடுமைகளுக்கு உட்பட்டும் இருந்திருக்கிறாள். தான் வாழும் சமூகத்திலும் இல்லற வாழ்க்கை மேற்கொள்ளும் குடும்ப அமைப்பிலும் பல்வேறு நிலைகளில் ஒடுக்குமுறைகளைப் பெண் சந்தித்து வருகிறாள். அறிவியல் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியைப் புனைவுத்தன்மையோடு சுட்டும் அறிவியல் புனைகதைகள் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் எதிர்காலத்திலும் தொடர்வதற்கு வாய்ப்புள்ளது என்பதையும் அதற்கு ஆண்களின் சிந்தனையில் திணிக்கப்பட்டுள்ள பெண்ணடிமைச்சிந்தனைகளே காரணம் என்பதையும் அறிவியல் புனைகதைகள் உணர்த்துகின்றன.

**துணைநின்ற நூல்கள்**


1. அந்தனி ஸ்டோர், மணி, சி. (மொ. பொ.), ஃப்ராய்ட், அடையாளம் வெளியீடு, புத்தாநத்தம், முதற்பதிப்பு, 2005.
2. ஆர்னிகா நாசர், அறிவியல் சிறுகதைகள் தொகுதி-1, ராமையா பதிப்பகம், சென்னை-14, முதல் பதிப்பு, 2001.
3. ஆர்னிகா நாசர், அறிவியல் சிறுகதைகள் தொகுதி-2 ராமையா பதிப்பகம், சென்னை-14, முதல் பதிப்பு, 2001.
4. சுரேஷ், எம்.ஜி. 37, புதுப்புனல், சென்னை, முதற்பதிப்பு, 2003.
5. சுஜாதா, என் இனிய இயந்திரா, விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை-17, ஏழாம் பதிப்பு, 2009.
6. ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும், தமிழினி, சென்னை, முதற்பதிப்பு, 2006.
7. சுஜாதா, விஞ்ஞான சிறுகதைகள், விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை-17, ஏழாம் பதிப்பு, 2008.